# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

12-9-71

★

உள்ளே......

'காஞ்சி'யின் வேண்டுகோள் (தலையங்கம்)

ஒரே இதழில் உலக நஞ்சு! (சிறப்புக் கட்டுரை)

உண்மைதானே! (சிறுகதை)

நிகழ்ந்ததைக் கேட்டால்...... (இலக்கியம)

சோழமாதேவி (தொடர் கதை)

விலை 20 காசு



செந்தமிழர் நாட்டின் செழும்பரிதி! நைந்தழிந்த பைந்தமிழர் வாழ்வின் பகலவனே !—

# உண்மைதானே?

— கலைமதி நாகராசன் —

ஆவலுடன் வசந்தி எழுதியிருந்த கடிதத்தைப் படித்தேன்.

"மிஸ்டர் சீனிவாசனுக்கு,

தாங்கள் என்னைக் காதலிப்பதாக எழுதியிருந்த தங்கள் கடிதத்தைப் படித்தபோது எனக்குக் கோபம் ஒரு பக்கம்; சிரிப்பு ஒரு பக்கம் வந்தது.

"என்னைக் காதலிக்க உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? மூன்று வேளையும் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு ஊரைச் சுற்றுகிறீர்கள். வீட்டில் பணம் வாங்கி சினிமா பார்க்கிறீர்கள். இந்த இலட்சணத்தில் உங்களுக்குக் காதல் வேறு கேட்கிறதாக்கும்?—"வசந்தி".

படித்த பின் வசந்திமேல் எனக்கு ஒரே வெறுப்பு ஏற்பட்டது.

என்னை எவ்வளவு மட்டரகமாக எடை போட்டு விட்டாள் அவள்!

அவள் என்னைப்பற்றி எழுதியதும் ஒருவகையில் உண்மைதான். அவள் சொல்வதுபோல் மூன்று வேளையும் சாப்பிட்டு விட்டு ஊரைத்தான் சுற்றுகிறேன். வேறென்ன செய்வது? வேலை எதுவும் கிடைக்கமாட்டேன்கிறதே! 'இருக்கட்டும்! நாளைக்கே மறுபடியும் எல்லா கம்பெனிகளுக்கும் படையெடுக்கப் போகிறேன். எப்படியாவது ஒரு வேலை வாங்கி, அதில் முன்னேறி உயர்ந்த பதவிக்கு வரவேண்டும். இப்போது என்னை வெறுக்கும் வசந்தியை என் காலடியில் விழவைக்க வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டேன்.

ஃ ஃ ஃ

தீர்மானித்ததென்னவோ உண்மைதான். ஆனால் வேலை எனக்கு உடனே கிடைக்கவில்லை.

மனதில் பெரும் சுமை அழுத்த பாரதியார் பூங்காவில் சிலைபோல் உட்கார்ந்திருந்தேன்.

"தம்பி!" என்று ஒரு கை என்னைத் தொட்டதும் மறுபடியும் நினைவிற்கு வந்தேன்.

'யார்?' என்று பார்த்தேன். என் நண்பன் ராஜுவின் தந்தை. அவருக்கு எனது நிலை தெரியும். அவரே எனக்கு உதவி செய்வதாக வாக்களித்திருந்தார்.

"குட்மார்னிங் சார்!..." என்று எழுந்தேன்.

"பரவாயில்லை தம்பி! சும்மா உட்கார்!" என்ற அவர், தம்பி! எங்கள் கம்பெனியில் ஒரு கிளார்க் போஸ்டிற்கு வேகன்சி இருக்கிறது. நாளைக்கே என்னோடு ஆபீசிற்கு வா! உனக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் செய்கிறேன்" என்றார். அவர் கைகளைப் பற்றிக்கொண்டு தழுதழுத்த குரலில் "ரொம்ப தேங்க்ஸ் சார்!" என்றேன்.

"பரவாயில்லை! நாளைக்கு வருகிறபோது உன் சர்ட்டிபிகேட் புக் எல்லாவற்றையும் மறக்காமல் கொண்டு வந்துவிடு" என்றார்.

"ஆகட்டும் சார்!" என்றேன்.

"வர்ரேன் தம்பி!" என்று அவர் புறப்பட்டார்.

ஃ ஃ ஃ

## சிறுகதை!

அடுத்த நாளே 'சுரேந்திரா ஏஜென்சி'யில் கிளார்க்காக சேர்ந்தேன். மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம்.

வசந்தியை அலட்சியத்துடன் பார்த்தேன். அவள் இப்போது, முன் போல் இல்லை. என்னைப் பார்த்து சில சமயம் புன்னகைக்கவும் செய்கிறாள். யாருக்கு வேண்டும் இந்த புன்னகை?

ஆறே மாதங்களில் என்னை மதுரைக் கிளைக்கு உதவி மானேஜராகப் பதவி உயர்வு கொடுத்தார்கள். வசந்தியின் காதில் இந்த சேதி விழுந்ததும் எங்கள் வீட்டிற்கே வந்து விட்டாள்.

என்னிடம், "கங்குராஜுலேஷன்ஸ்! மதுரை பிராஞ்சிற்கு அஸிஸ்டென்ட் மானேஜராகப் பிரமோஷன் கிடைச்சிருக்கு போலிருக்கே!" என்றாள். மிகவும் அலட்சியத்துடன் தலையை ஆட்டினேன். என் அலட்சியம் அவளைக் கலங்க வைத்தது. கண்களில் கூட நீர் வரும் நிலை. ஆனால் சமாளித்துக் கொண்டாள்.

"எப்போது "ஜாயின்ட்" பண்ணப் போறீங்க?" என்று கேட்டாள்.

"அதை உன்கிட்டே சொல்லணுங்கிற அவசியம் எனக்கு என்ன இருக்கிறது?" என்றேன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவளால் அதற்கு மேலும் நிற்க முடியவில்லை. 'பட்'டென்று தலையைத் தாழ்த்திக் கொண்டு அவளது வீட்டிற்குப் போய்விட்டாள்.

எனக்கு மனதிற்குள் ஓர் மகிழ்ச்சி.

'நான் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தபோதெல்லாம் என்னைவிட்டு ஓடிய அவள், இப்போது என்னை வளைய வளைய வருகிறாள். நானா இதற்கெல்லாம் ஏமாறுபவன்? அவளைக் காதலிக்க எனக்கு என்ன தகுதிகள் இருக்கிறது என்று கேட்டவளாயிற்றே? அவளை இதோடு விட்டுவிடுவேனா, என்ன?'

ஃ ஃ ஃ

வசந்தியை எனக்குக் கொடுக்க அவர்கள் வீட்டில் சம்மதம் என்றும் என்விருப்பம் என்னவென்றும் அம்மா என்னை கேட்டுக்கொண்டே பறிமாறினாள். (நீண்ட நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்தபோதுதான் என் கல்யாணப் பேச்சு அடிபட்டது).

விரைவில் எனது கருத்தைச் சொல்வதாகக் கூறினேன்.

வெளியில் போய் விட்டு வீட்டிற்கு வந்தபோது தற்செயலாக என் தங்கையும் வசந்தியும் பேசியதைக் கேட்க நேர்ந்தது.

"வரவர உங்க அண்ணன் என் மீது ரொம்ப வெறுப்பாக இருக்காரு" அன்றைக்கென்னவோ அவருக்குத் தாறுமாறாகக் கடிதம் எழுதினது உண்மைதான்; இல்லைன்னு மறுக்கலே. ஏன் அப்படி எழுதினேன் தெரியுமா?......

"அவர் வீட்டில் சும்மா இருந்தபோதெல்லாம் உங்க அப்பா அவரைத் திட்டியதெல்லாம் எனக்குத் தெரிந்ததுதான். அவரைத் திட்டும்போது நான் எவ்வளவு வருத்தப்படுவேன் தெரியுமா? அதற்குப் பிறகு நான் அவர் வேலை தேடாததைச் சுட்டிக் காட்டி அவரை வெறுக்கிற மாதிரி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தைப் படித்த பிறகு அவருக்கு ஏற்பட்ட அந்த ரோஷ உணர்ச்சிதான் அவரை பத்தே நாட்களில் வேலை தேடச் செய்தது. அதேபோல் வேலையும் கிடைத்து இன்றைக்கு உதவி மானேஜராக இருக்கிறார். அன்றைக்கு நான் அப்படி

(4-ம் பக்கம் பார்க்க.)

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 12—9—71 | இதழ் 9

# 'காஞ்சி'யின் வேண்டுகோள்!

டாக்டர் அறிஞர் அண்ணா அவர்களது மறைவுக்குப் பிறகு, இப்போது மூன்றாவதாக அவரது பிறந்தநாள் பெருவிழா அடுத்த கிழமை நாடெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது.

இப்போது அமரர் அண்ணா அவர்கள் உயிருடன் இருந்திருந்தால், இப்போதைய பெருவிழா, 62-ஆம் அகவையின் முடிவையும், 63-ஆம் அகவையின் துவக்கத்தையும் குறிப்பதாக இருக்கும்.

கடந்த மூன்றாண்டுக்கால இடைவெளியில், பேரறிஞர் அண்ணா அவர்களது மறைவு காரணமாக, ஈடுசெய்ய முடியாதொழிந்த நிகழ்வுகள் பலப்பல வென்றாலும், இப்போதைய முதலமைச்சர், தஞ்சைத் தரணி ஈன்றுதந்த தகைமைசால் வேந்தன், அண்ணா அவர்களது விழைவுகளையும், வேட்கைகளையும் சரியான முறையில், தீவிரமானவகையில், துணிகரமான தன்மையில் செயல்படுத்திக்கொண்டு வரும் செயலாற்றலின் தனிச் சக்தியாம் கல்லக்குடி கொண்ட கலைஞர் கருணாநிதி அவர்கள், நாடு எதிர் பார்த்ததற்கும் மேலாகவே செயல்படுத்தி, அண்ணா அவர்கள் இல்லாத குறையை முழு அளவுக்கு ஈடு செய்து வந்திருக்கிறார்கள்.

ஆனாலும்......

ஆனாலும்......என்று தொடர்புள்ளி இட்டுத் தான் மேலே தொடரவேண்டி இருக்கிறது.

சென்ற கிழமையுடன், பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பெற்ற 'காஞ்சி' எட்டாண்டுகள் நிறைவெய்தி எட்டு இதழ்களையும் நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறது. அதாவது எட்டு ஆண்டுகள் நிறைவுற்று, எட்டு கிழமைகளும் முற்றுப் பெற்று விட்டன.

அறிஞர் அண்ணா அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில், 'காஞ்சி' இதழின் முக்கியத்துவம் எத்தகையதா இருந்தது என்பதற்கு இன்னும் இன்னும் இன்னும் விளக்கங்கள் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலை இல்லை.

ஆனால், அண்ணா அவர்களைப் பறிகொடுத்து விட்ட இந்த இடைக்காலத்தில் அது படும் பாடுபற்றி எடுத்துச் சொல்லாமலிருக்க முடியாது.

நினைத்துப் பார்க்கிறபோது, நிமிர்ந்திருக்கும் நெஞ்சகம்கூட, தானாகத் தாழ்ந்துபோகிறது. அந்தக் கட்டத்தையும் கடந்து, முனைப்புக்காட்ட முனையும் போது பெருமூச்சுக்கள் முந்திக்கொள்கின்றன. அதனையும் அலட்சியப்படுத்திவிட்டு செயலூக்கத்தின்மீது சிந்தை செலுத்தும்போது, கழகத் தோழர்களின் கரங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. அந்தக் கரங்களிலே 'காஞ்சி' இதழ் இல்லாமலிருக்கின்ற வெறுமையும் தெரிகிறது.

எல்லா தளர்வுகளுக்கும் காரணம் கற்பித்துக் கொண்டு, சமாதானம்பெற முடிகிறது. ஆனால், கழகத் தோழர்களது பேராதரவு குன்றிவிட்ட நிலைக்கான காரணத்தை எண்ணிப் பார்க்கும்போது மட்டும், ''அண்ணா, நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்திருக்கக் கூடாது'' என்று எங்களையும் அறியாமல், இதயத்தின் அடியிலிருந்து சொற்கள் உதிர்வதனைத் தடுத்துக் கொள்ள முடியவில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், ஊருக்கொரு தி. மு. க. கிளைக் கழகமும், பல துணை மன்றங்களும் இருந்துகொண்டுதானிருக்கின்றன. அவைகளில் கழகத்தின் வளர்ச்சிக்காக அன்றும், இன்றும், என்றுமே உயிரைக் கொடுத்து செயல்படும் தோழர்கள் பங்கு பற்றிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

கிளைக் கழகங்களுக்கு ஒன்று வீதமும், துணை மன்றங்களுக்கு ஒன்று வீதமும்கூட, ''காஞ்சி''க்கு ஆதரவு கொடுக்க முன்வந்தால், ''காஞ்சி'' இதழின் சேவை, இன்னமும் சிறப்புற அமையும் என்று எடுத்துக்காட்டவேண்டிய நிர்ப்பந்தம் கட்டாயமாகி விட்டிருக்கிறது.

வெளிப்படையாக எடுத்துக் காட்ட முடியாத பலப்பல காரணங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, காஞ்சி இதழின் சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று நாம் கருதுவதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது. அதுதான்—

> ''காஞ்சி'' இதழ், பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப் பெற்றது.

என்பதாகும்; அதுதான்—

> பேரறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப் பெற்ற ''காஞ்சி'' இதழை, எந்தக் காரணத்தாலும் நிறுத்தி விடக்கூடாது என்பதாகும்.

இந்த நல்ல எண்ணத்தை, நாங்கள் நெஞ்சு நிரம்ப ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

என்றாலும், பேரறிஞர் அண்ணா அவர்களது மறைவின் விளைவுகளை எண்ணிப் பார்க்கிறபோது நெஞ்சு நிரம்ப இருக்கும் அந்த நல்ல எண்ணத்தில் கூட கூன் விழுந்து விடுகிறதே!

தளர்ந்த நடையேயானாலும், 'காஞ்சி'யின் நடையில் தொய்வு விழுந்துவிடக் கூடாது என்றுதான் நாங்கள் அரும்பாடு படுகிறோம். என்றாலும் அந்தத் தொய்வு, சென்ற ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையில் எங்களையும் மீறி ஏற்பட்டுவிட்டபோது, அறிஞர் அண்ணா அவர்களது பிரிவினைத்தான் எண்ணிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். வருங் காலத்திலும், அது போன்ற சிறு தொய்வு கூட ஏற்பட்டுவிடக்கூடாது என்றுதான் எங்களைப் பொறுத்த வரையில் விரும்புகிறோம்; அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறோம்.

என்றாலும், என்றாலும்...

அறிஞர் அண்ணா அவர்களுடைய 'காஞ்சி' இதழினைக் காத்து, ஒழுங்குபட நடையிடச் செய்யவேண்டிய பொறுப்பு, எங்களைவிட, கழகத் தோழர்களாகிய உங்களது கரங்களில்தான் இருக்கிறது.

உங்களது விழைவுகளை நிறைவேற்றுவது 'காஞ்சி' என்ற நம்பிக்கை உங்களுக்கிருக்கவேண்டும்; அது போல 'காஞ்சி' யை, கரம்பற்றிக் களிக்கும் தாராள மனமும் உங்களுக்கு இருக்கவேண்டும்.

கழகத் தோழர்கள்—பல இலட்சம் பேர் இருக்கிறீர்கள். ஆயிரத்தில் ஒருவர் என்று ஆதரவு காட்டினால்கூட — 'காஞ்சி' பல்லாயிரம் பிரதிகள் என்று உயர்ந்துவிடும்!

எந்தக் 'காஞ்சி'யின் துணைகொண்டு, தமிழகத்தின் வளவாழ்வுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தடம் அமைத்துத் தந்தார்களோ. அந்தக் 'காஞ்சி' தான் இன்று உங்களது நல்லாதரவுக்கு கரம் நீட்டுகிறது.

அந்த ஆதரவு, ஆண்டு சந்தாக்களாக, ஆயுள் சந்தாக்களாகக் குவிய வேண்டும்.

விற்பனையாளர்களின விற்பனைப் பெருக்கமாக மாறவேண்டும்.

விளம்பரங்கள தருவதும், திரட்டுவதுமாக இருக்கவேண்டும்.

'காஞ்சி' இதழ், அடிக்கடி தன் விண்ணப்பத்தை, கழகத் தோழர்களிடம் வைத்ததில்லை. பத்திரிகைக் காகிதங்களின் விலையேற்றம் காரணமாக, பிற இதழ்கள் எல்லாமே, விலையைக் கூட்டிக்கொண்ட காலத்திலும்கூட 'காஞ்சி', விலை கூட்டியதில்லை. வேண்டுகோள் விடுத்ததில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள், எங்களை விட்டுப் பிரிந்துவிட்ட நேரத்தில், "கழகத் தோழர்கள் பல லட்சம் பேர் எங்களுக்கிருக்கிறார்கள்; என்ற திருப்தியில் நாங்கள் ஆறுதல் பெறுகிறோம்" என்று தெரிவித்திருந்தோம். அதனை இப்போது நினைவுபடுத்திக் காட்டி, 'காஞ்சி' தன் வேண்டுகோளினை விடுப்பது நியாயமானதே யாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்களை மனக்கண் முன்பு கொண்டுவந்து நிறுத்த, அவரது எண்ணங்கள் — செயல்கள் பற்றியெல்லாம் நினைவுபடுத்திப் பார்க்கப் போகும் இந்த வாரத்தில், கழகத் தோழர்களும், கிளைக் கழகங்களும், துணை மன்றங்களும், 'காஞ்சி'யின் இந்த வேண்டுகோளையும் நினைவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

**சி. என். ஏ. இளங்கோவன்.**

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடிதம் எழுதியிருக்கா விட்டால் இன்றைக்கும் உன் அண்ணன் வேலையில்லாமல்தான் இருப்பார். ஆனால் என்னைத் தவறாக எண்ணிக் கொண்டு விட்டார். என்னைக் கல்யாணம் செய்துகொள்ள மறுக்கிறார். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. நான் அவரைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன். இல்லையென்றால் எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவள் கூறியது உண்மைதானே?

.........அவள் மட்டும் அன்றைக்கு எனக்கு அப்படி ஒரு கடிதம் எழுதாமல் இருந்தால் நான் இன்றைக்கு உதவிமானேஜராக இருக்க முடியுமா?

பிறகென்ன?...வசந்தியை எனது உடமை யாக்கிக்கொள்ள எனக்கென்ன ஆட்சேபணை?

★ **Matchless Quality**
★ **Intricately Woven**
★ **Colourful, And lively**

**Co-optex**

**HANDLOOM FABRICS**

**Cost a lostless...** **Last a long time**

**Tamil Nadu Handloom Weavers' Co-operative Society Ltd.,**

(Balasundaram Buildings)

34/1-A, Pantheon Road Egmore, Madras-8.

# சோழமாதேவி

ராஜிமணாளன்



[25]

## தம்பளை அனுபவம்!

எள்ளாளச் சோழப் பேரரசரும், சோழமாதேவியும், குகையின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் நுழையக்கூடாது என்று காவலர் கூறியதை மீறி, உள்ளே நுழைய முயன்ற உடனேயே, காவலர்களது கையிலிருந்த தீப்பந்தங்கள் அணைக்கப்பட்டதுடன், காவலர்களில் ஒருவன் பேரரசர்மீது பாய்ந்து, கழுத்தை நெறிக்கத் தொடங்கியதும், சற்றும் எதிர்பாராத இந்த திடீர்த் தாக்குதலை எண்ணி, மன்னர் ஒரு விநாடி அதிர்ச்சியடைந்தாலும், அடுத்த கணமே தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

என்றாலும், தன் பிடியிலிருந்து, சோழதேவியை விடுவித்து விட்டுத்தான், எதிரியைச் சமாளிக்க வேண்டியிருந்ததால், சோழதேவியின் மீதான பிடியைத் தளர்த்தினார் மன்னர். பிடியிலிருந்து விடுபட்ட அரசியார், இருளில் எதுவுமே புரியாது, அப்பால் நகரத் தொடங்கியதும், குகையினது உட்பிரிவின் உட்பகுதியில் காலிடறி விழுந்தார்.

விழுந்த தேவியாரை எதுவோ தாக்கியது. தாக்குண்ட தேவியார், "ஐயோ" என்று கூக்குரலிட்டார். அது குகையெங்கும் பரவி, முட்டி மோதிச் சிதறி. எதிரொலித்தது.

அதே நேரத்தில், மன்னர் தன்மீது பாய்ந்தவனை லாவகமாகப் பற்றிக்கொண்டு, எதிரியின் தாக்குதல், மீண்டும் தன்மீது இல்லாதவாறு தடுத்துக்கொண்டார். என்றாலும், இன்னொருவன் எங்கே? தேவி கூக்குரலிட்டாளே, ஒருகால், அவன் தேவிக்குத் தீங்குண்டாக்கி விட்டானோ? என்று சிந்தித்துக் கொண்டே, காவலனையும் இழுத்துக்கொண்டு. இருளில் தட்டுத் தடுமாறி உட்பிரிவின் முகப்புக்கு வர முயன்றார்.

என்றாலும், குகையின் உள்ளே பாய்ந்துகொண்டிருந்த சூரியஒளி தென்பட்ட பகுதிக்கு வருவதற்கு மாறாக, தேவியார் தாக்குண்ட அதே பகுதிக்கே வந்து சேர்ந்தார்.

சோழதேவி, அங்குதான் இருக்கிறார் என்பதோ, அல்லது சோழப் பேரரசர், அந்த இடத்துக்கே வந்து சேர்ந்துவிட்டார் என்பதோ இருவருக்குமே தெரியவில்லை.

குகையின் சுவரை ஒரு கையால் தடவிக் கொண்டு, இன்னொரு கையால், காவலனையும் பற்றிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தார் மன்னர். ஆனால், அந்த முன்னேற்றத்தைத் தடைசெய்து கொண்டிருந்தது காவலனது முண்டுதல்கள்.

மன்னரது இரும்புப் பிடியிலிருந்து காவலனால் தப்ப முடியவில்லை. ஆனால், தான் தப்பியே ஆகவேண்டும் என்கிற வெறித்தனத்தில், அவன் மன்னரை கால்களால் உதைக்கத் தொடங்கினான்.

சில உதைகள் மன்னர்மீது பட்டாலும், பல உதைகள், பாவம், சுவற்றின்மீதே பட்டன! பாவம் காவலன்! சுவற்றில் உதைபட்ட நேரங்களிலே எல்லாம் அவனும் 'ஐயோ அம்மா!' என்று கூச்சலிட்டான்!

இப்படி ஒருமுறை அவன் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும்போதே, அந்த இடத்திலிருந்து மறுபடியும் சோழதேவியின் அவலக் குரல் கேட்டது.

ஏதோ ஒன்றால் தாக்கப்பட்ட அவர், கீழே தடுமாறி விழுந்து, மறுபடியும் தள்ளாடி எழுந்து, நடக்க முயன்றபோது மீண்டும் காலிடறி விழுந்தார்! கீழே விழுந்த அவரை மறுபடியும் ஏதோ ஒன்று தாக்கியது! மறுபடியும் அலறினார். அதை ஒட்டி, வெண்கலப் பண்டங்கள் உருளுவது போன்ற ஒலியும் கேட்டது.

அரசியாரின் இந்த அவலக் குரலையும், பண்ட பாத்திரங்கள் உருளுவது போன்ற ஒலியும் கேட்ட மன்னர், ஒரு விநாடி வியந்தார்! உடனேயே "தேவி, தேவி!" என்று குரல் கொடுத்தார். "இங்கே வாருங்கள் பிரபு! இங்கேதான் இருக்கிறேன் பிரபு! வாள் கொண்டு யாரோ என்னைத் தாக்குகிறார்கள் பிரபு!" என்று தடுமாறிக்கொண்டே பதில் தந்தார் தேவியார்.

"வருகிறேன் தேவி! இங்கேதான் தேவி இருக்கிறேன் நான்!" என்று கூறிக்கொண்டே தேவியின் குரல் வந்த திசையில் அடிவைத்து நடக்க முயன்றார் மன்னர்.

அதற்குள் பிடியில் சிக்கியிருந்த காவலன், ஹா ...ஹா...ஹா என்று பயங்கரமாகச் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கிவிட்டான். "உன் தேவன் வந்து உன்னைக் காப்பாற்றப் போகிறானா? பார்க்கிறேன் அதை" என்று கூறி எக்காளமாக மீண்டும் அவன் சிரித்தது குகையில் இருளின் பயங்கரத்தைவிட அதிகமாக இருந்தது.

அந்தப் பதரின் ஆர்ப்பாட்டத்தை அரசர் சட்டை செய்யவில்லையானாலும், தன் பிடியில் சிக்காத மற்றவன்தான் தேவியை வாள் கொண்டுத் தாக்குகிறான் என்று எண்ணிக்கொண்டார் மன்னர்.

தன் பிடியில் சிக்கி இருப்பவன், இவ்வளவு ஆர்ப்பாட்டங்களைச் செய்யும்போது, இன்னொருவன் மட்டும் பேச்சு மூச்சின்றி எப்படி இருக்கிறான் என்பதை எண்ணிப் பார்த்தார் மன்னர்!

பிடிபடாதிருக்கும் இன்னெருவனல் தேவி, தாக்கப்படவில்லையானுல், அவனுல் இருவருக்குமே ஆபத்து ஏற்படக்கூடும் என்று மன்னர் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, மன்னரும் ஒரு இடத்தில் காலிடறி கீழே விழுந்தார்!

எவ்வளவோ எச்சரிக்கையாக வந்தும், மன்னர் ஏமாந்தார். கீழே இடறி விழுந்ததும், காவலனைப் பற்றியிருந்த பிடி நழுவியது, அவன் தப்பிவிட்டான்!

காவலன் தப்பிவிட்டான் என்பதை இருளைக் கிழித்துக்கொண்டு, தடுமாறி ஓடிய காலடி ஓசை புலப்படுத்தியது.

மன்னர் விரும்பி இருந்தால், அவரும் எழுந்து சென்று காலடி யோசையைத் தொடர்ந்து உட்பிரிவின் முகப்பு வரையில் போய், உள்ளே வந்துகொண்டிருக்கும் சூரியக் கதிரின் ஒளியின் உதவியால் பிடித்துக்கொண்டிருக்க முடியும்!

ஆனுல், அவனைப் பிடிக்க வேண்டுவதைவிட முக்கியமான வேருென்றைத் தெரிந்துகொள்ள வேண்டுவது மிகவும் முக்கியம் எனப்பட்டது மன்னருக்கு.

தேவியாரின் முணகல் ஒலி மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது ஒருபக்கமிருந்து. அவர் சற்று முன் அலறிக் கூவும்போது பாத்திரங்கள் உருள்வதைப் போன்ற அதே ஒலி, மன்னர் இடறி கீழே விழுந்த போதும் கேட்டது.

அதைத் தொடர்ந்து கீழே விழுந்த மன்னரின் கையில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. மன்னர் அதனைத் தடவிப் பார்த்து அது ஒரு கேடயம் என்பதைப் புரிந்துகொண்டார்.

கேடயங்கள் அங்கே குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதும், அவைகள்தான் கீழே சரிந்திருக்கின்றன என்பதையும் யூகித்துக்கொள்ள மன்னருக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

கையில் கிடைத்த கேடயத்தை வீசியெறிந்து விட்டு, முதலில் தேவியைக் கண்டுபிடிக்கலாம் என்று கேடயத்தை வீச முற்பட்டு விட்டபோது, கேடயம் ஒருவேளை தேவியின்மீதே விழுந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை பற்றிக் கொள்ளவே, தன் கால்களால், அங்குமிங்கும் தடவிப் பார்த்து கேடயங்கள் உருண்டு கிடந்த பகுதியில் மெள்ள அதனைப் போட்டுவிட்டு, மீண்டும் "தேவி…எங்கே இருக்கிருய் தேவி" என்று குரல் கொடுத்தார். தேவியின் முணகல் கூட இப்போது கேட்கவில்லை. எனவே பதிலும் கிடைக்கவில்லை.

சோழ?தவியின் குரல், எதிரொலிக்கவில்லையாதலால், மன்னர் திடுக்கிட்டுப் போனுர்!

தேவி என்ன ஆனுள்? நினைத்துப் பார்க்க முடியவில்லை எள்ளாளப் பேரரசரினுல்! ஒருகால், ஓடிப் போனவன், தேவியையும் தூக்கிக்கொண்டு போய் விட்டானே? அல்லது பிடிபடாமலிருந்தவன், தேவியைக் குத்திக் கொலை செய்து.விட்டானே! மன்னர் தடுமாறிப் போனுர்.

பலங்கொண்ட மட்டும் "தேவி தேவி" என்று கத்தினுர். மன்னரின் குரல்தான் எதிரொலித்து பயமூட்டியதே தவிர, தேவியின் பதில் கிடைக்கவில்லை.

குழப்பமடைந்த மன்னர், தடுமாற்றத்தோடு, கால்களால் தடவிப் பார்த்தும், கைவிரித்துப் பார்த்தும் தேவியைத் தேடத் தொடங்கினுர். அவரது உதடுகள் மெள்ள தேவி, தேவி என்ற சொற்களை மட்டுமே உதிர்த்துக் கொண்டிருந்தன!

வெகுநேரம் வரையில் மன்னர் தேடிக் களைத்துப் போனுர். போதிய காற்ருேட்டமில்லாத நிலை, அவரை சோர்வுறச் செய்தது மட்டுமல்லாமல், இலேசான மயக்கத்தையும் உண்டாக்கிவிட்டது. நடையில் ஏற்பட்ட தள்ளாட்டம் அவர் மிகவும் தொய்ந்து போனுர் என்பதை உணர்த்தியது. ஆயினும் அவர் தேவியைத் தேடுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. தேவியையும் அழைத்துக் கொண்டல்லவா உட்பிரிவுக் குகையின் முகப்புக்கு வந்து, ஒளிக்கீற்றின் உதவியைப் பெற்று, அவரது நிலையை ஆராயவேண்டும்! எனவேதான், தான் இதுவரையில் தேடிய பகுதியின் எதிர்ப் புறமாக இப்போது நடக்கத் தொடங்கினுர்.



# இறப்பை வென்ருர்!

(இரா. கு. வடிவேலு, பி.ஏ.,)

மண்ணில் பிறந்த மாந்தரிலே
மாட்சிமை பெற்றவர் அண்ணுவே!
கன்னல் சாற்றின் சுவைபோலே
கருத்துள இலக்கியம் சமைத்தாரே!
இன்னல் சூழ்ந்த நேரத்தில்
இந்திய ஒற்றுமைக் காத்தாரே!
எண்ணற் கரிய தியாகத்தை
இன்னுயிர் தந்து செய்தாரே!

இந்திய நாட்டின் உயர்வுதனை
இவ்வுல கரியச் செய்திட்டு
சிந்தைத் திறத்தால் "யேல்கழக"
சிறப்புள "டாக்டர்" பட்டத்தை
சொந்தம் ஆக்கிய மாமேதை!
சொல்லின் ஊற்ருய் திகழ்ந்தாரே!
அந்தம் இல்லாப் புகழினையே
அவர்தம் உடமை ஆக்கினரே!

நிலமிசை அவர்ஒரு அறிவுமழை!
நேசம் பொழியும் பாசமழை!
உலர்ந்திடும் பயிரின் பருவமழை!
உரிமை முழங்கிய நெருப்புமழை!
பலகலை மேவிடும் அமுதமழை!
பழகும் உளத்தின் அன்புமழை!
தலைமுறை படிக்கும் கவிதைமழை!
தாரணி போற்றும் பண்புமழை!

சிறிது தூரம் சென்றதும், மறுபடியும் காலிடறி அவர் கீழே விழுந்தார்! அவர் இந்த முறை விழுந்த போது, அவரையும் ஏதோ ஒன்று தாக்கியது. மன்னர் கூட 'ஆ' என்று அலறிவிட்டார். ஆனாலும் அவர் மன்னரல்லவா! தன் இடது கைத்தடத்தில் பதிந்த அது என்ன என்று தடவிப் பார்த்து அது ஒரு வேல் என்பதைப் புரிந்து கொண்டார்! அவ்வளவுதான், அந்த நிலையிலும் அவரது வழக்கமான சிந்தனை செயல்படத் தொடங்கிவிட்டது. இருளிலேயே இமைகள் மூடித் திறந்தன, ஒரு வினாடி!

ஏற்பட்டிருந்த மயக்க நிலையும், சோர்வும் எங்கே போய் ஒளிந்து கொண்டனவோ தெரியவில்லை. முழு வலிவும் வரப்பெற்றவரைப் போல் சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கிவிட்டார்!

மன்னர்கள், ஆண்டவனின் அவதாரம் என்கிறார்களே, இதைப்போன்ற சந்தர்ப்பங்களைக் கொண்டு தானோ என்னவோ!

சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கினாலும், எல்லாவற்றையும் துலக்கமாகச் செய்ய முடிந்த சூழ் நிலை இல்லையே!

இப்போது மன்னர் 'தேவி' என்று குரல் கொடுக்க வில்லை. அவரைத் தேடிக் கண்டு பிடிப்பதைவிட, மிக முக்கியமான அந்தக் குகையின் இரகசியத்தைக் கண்டு பிடித்தாகவேண்டிய வேலையல்லவா மன்னருக்கு வந்துவிட்டது.

முதலில் கேடயங்கள் இருப்பதனை அறிந்து கொண்டவர், அடுத்து வேல்கள் இருப்பதையும் புரிந்து கொண்டவுடன், திடமான ஒரு நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டுவிட்டது. அங்கே போர்க் கருவிகள் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகிவிட்டது. அதனாலேயே காவல் வீரர்கள், தங்களை அந்தப் பகுதியில் போகக்கூடாது என்று தடுத்தார்கள் என்பதும் தெளிவாகிவிட்டது. குவித்து வைக்கப்பட்டிருக்கும் போர்க்கருவிகளுக்கும், சேர்த்து தான் அவர்கள் காவலர்களாக இருக்கிறார்கள் என்பதும் நிரூபணமாகிவிட்டது.

தனக்குத் தெரிந்த வரையில், இதுபோன்ற எந்த ஏற்பாட்டுக்கும் தான் உத்திரவிடவில்லை என்பது நன்றாக நினைவிருக்கிறது. முத்துமுடியாருடைய ஏற்பாடாக இருந்தாலும், அது தனக்குத் தெரிந்திருக்க முடியும். தளபதியார் மட்டுமே தனியாக இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தாலும், ஒற்றுத் துறையின் மூலம் அது தனக்குத் தெரிந்திருக்கமுடியும். எனவே, எதிரிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கையே இது என்பதை மன்னர் நிர்ணயித்துக் கொண்டார்.

தன்னைத் தாக்கியதுபோலவேதான் குவிக்கப்பட்டிருக்கும் இந்த வேல்கள், அல்லது வேறெங்கேனுமிருக்கும் வாள்கள் தேவியையும் அவர் இடறிவிழும் போது தாக்கி இருக்கவேண்டும். அதனாலேயே அவர் ஐயோ என்று அலறி இருக்கவேண்டும். இரண்டு முறை அவர் அவ்வாறு அலறியதனால், இருமுறை வாள்கள் அல்லது வேல்களின் தாக்குதலுக்கு தேவியார் ஆளாகி இருக்கிறார். இத்தாக்குதலினால் அவர் மூர்ச்சையாகிக் கிடக்க வேண்டும்!

யூகத்தின் மூலமே மன்னர், சரியான ஒன்றை நிர்ணயித்துக்கொண்டதும், முதற்படியாக அங்கே தீப்பந்தத்துக்கு வழி தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.




தப்பியோடி இருப்பவர்களால் மீண்டும் ஆபத்து எதுவும் ஏற்படாமல் காப்பாற்றிக் கொள்வதற்குக் கூட உடனே ஒரு ஒளிக்கோல் தேவை.

இவ்வாறு மன்னர் எண்ணிக் கொண்டதும், தான் இருந்த இடத்திலிருந்து மீண்டும், சுவர்களைத் தடவிப் பார்த்துக்கொண்டே பின் வாங்கினார். சில அடி தூரம் மட்டுமே அவர் கடந்திருக்க முடியும்!

என்ன அதிசயம்! எள்ளாளரைத் தொடர்ந்து இறைவனே அந்தக் குகைக்குள் வந்துவிட்டானோ என்று எண்ணும்படியாக பிரிவுக் குகையின் முகப்பில் யாரோ ஒருவன் ஒரு தீப்பந்தத்தை வைத்துக் கொண்டு நின்றுகொண்டிருக்கிறானே !

பைத்தியக்காரத்தனமான எண்ணம்தான் அது! ஒற்றன் உலகாயதன் அல்லவா அவன்! அவனுக் கல்லவா இப்போது இறைவன் என்ற பெயரைச் சூட்டவேண்டியிருக்கிறது!

தூரத்தில் ஒருவன், தீப்பந்தத்தை வைத்துக் கொண்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருப்பது, இப்போது மன்னருக்குத் தெரிந்தது! மங்கிய ஒளியே யானாலும் அவன், உலகாயதன்தான் என்பதைப் புரிந்துகொண்டார் மன்னர்.

அடுத்த வினாடி?

குரல் கொடுத்து உலகாயதனை அழைக்க விரும்பியவுடனே, இன்னொரு எண்ணமும் பற்றிக்கொண்டது மன்னரை!

உலகாயதன் இங்கு எதற்காக வந்தான்? இந்த ஏற்பாடுகள் அனைத்தும் ஒருவேளை, அவனுடையதாக



# அண்ணா மறையவில்லை!

புலவர் -
இரா. பன்னீர்செல்வம்

இன்பத்தின் எல்லையிலே எந்தமிழர் ஓங்க
இதயத்தின் இயக்கமெலாம் ஈந்துநின்றார் அண்ணா
துன்பத்தின் விளிம்பினிலே துவண்டிருந்த போதும்
தூயதமிழ் உயர்வினுக்கே தொண்டளித்தார்
அண்ணா

அன்பிற்கும் அடைக்குந்தாழ் அவனியிலே ஏது?
அதனாலே வடிக்கின்றோம் கண்ணீரே அன்றி
அண்ணாவா மறைந்துவிட்டார் தாரணியின் மீது
அழிக்கவொண்ணா அவர்நெறியே ஆர்த்திருக்கும்
போது

இயலிசையில் இருங்கூத்தில் மறுமலர்ச்சி அண்ணா
இன்பமொழி அன்புவழி இலக்கியமே அண்ணா
பயமொழிக்கும் பகுத்தறிவுப் பண்பிறையே அண்ணா
பைந்தமிழின் பண்பாட்டுப் புரட்சிக்கு அண்ணா
நயம்பொழியும் நகைமிளிரும் நூற்களெல்லாம்
அண்ணா
நாட்டுக்கு நலஞ்செறிக்கும் நன்விருதே அண்ணா
வயல்விளைச்சல் வளங்கொழிக்க வகுத்தவழி அண்ணா
மாட்சிதருங் காட்சியெலாம் வாழுகின்றார்
அண்ணா!

வும் இருக்கலாமோ? காவலர்கள் அவனது ஏவலர்களோ? இப்படி எண்ணிக்கொண்டார் மன்னர்.

முதலமைச்சர் முத்துமுடியாரிடம், தான் பயணம் மேற்கொள்ள ஒரு தேர் மட்டும் தயார்செய்யும்படிக் கூறியதும், பிற விவரங்கள் எதுவும் அவரிடம் தெரிவிக்காததும், பிறகு தேரையும் ஒதுக்கிவிட்டு, குதிரையில் வந்ததும் நினைவுக்கு வந்தது அப்போது. தன் பயணத்தை ஒற்றுத்துறை கண்காணிக்கிறதா என்ற ஐயமும் வந்து சேர்ந்தது.

உலகாயதனுடைய வருகை குறித்து, ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்க அதுசமயம் இல்லை. அவன் அங்கு எதற்காக வந்திருக்கிறான் என்பதைக் கண்காணிக்க வேண்டும் முதலில். மன்னர் இப்படி எண்ணிக் கொண்டதும், வந்த வழியிலேயே சில அடிகள் முன்னேறிப் போய், கைகளாலும், கால்களாலும் தடவிப் பார்த்து, கேடயங்கள் குவிக்கப்பட்டிருந்த இடத்தை அடைந்து அவற்றை ஒட்டினாற்போலுள்ள வற்றின் ஓரத்தில் கேடயங்களின் அருகே அமர்ந்தார். சில கேடயங்களைத் தன்மீது எடுத்துப் போட்டுக்கொண்டு தான் அமர்ந்திருப்பது தெரியாத வண்ணம் மறைத்துக்கொண்டார்.

அடுத்த சில விநாடிகளில், அங்கு வந்து சேர்ந்தான் உலகாயதன். தீப்பந்தத்தை அப்படியும் இப்படியுமாகத் தூக்கிப் பார்த்துக்கொண்டே கேடயங்கள் குவிக்கப்பட்டிருந்த இடத்தில், மன்னருக் கருகிலேயே நின்றுகொண்டு, அந்தக் கேடயங்களைப் பார்த்து வியக்கத் தொடங்கினான்! அந்த வியப்பு வார்த்தைகளாக வெளிப்பட்டது. மறைந்திருந்த மன்னரது காதிலும் தெளிவாக விழுந்தது.

"எத்தனை முறை இந்தக் குகைக்கு வந்திருக்கிறேன் நான்! இப்படி அதிசயம் ஒன்று இங்கே இருப்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! அடேயப்பா! எவ்வளவு கேடயங்கள்!" என்று சொல்லி, வலக்கையில் பற்றியிருந்த தீப்பந்தத்தை இடக்கையில் மாற்றிக்கொண்டு, ஒரு கேடயத்தை எடுத்துப் பார்த்தான், அவன் விழிகள் அகன்று விரிந்தன! "என்ன, சிங்க இலச்சினை இருக்கிறதே இதில்! ரோகணநாட்டு அரசின் இலச்சினை அல்லவா இது!" என்று சொல்லிக்கொண்டே, கையிலிருந்த கேடயத்தை வீசியெறிந்தான். அது மன்னர் மறைந்திருந்த இடத்தில், நேராக மன்னரது தலை இருந்த இடத்தில் சென்று விழுந்தது! கேடயம் மன்னர்மீது விழுந்ததால், அவர் மறைந்திருந்த இடத்திலிருந்த கேடயங்கள் மெள்ள ஆட்டங்கண்டன. அதாவது மன்னரது உடலும் மெள்ள அசைந்து கொடுத்தது. கேடயம் விழுந்ததனால் அந்த அசைவு என்று எண்ணிக்கொண்டே, மற்றொரு கேடயத்தைக் கையிலெடுத்துப் பார்த்தான் உலகாயதன். "இதிலும் சிங்க இலச்சினைதானா!" என்று கூறிக்கொண்டே, அதையும் வீசியெறிந்துவிட்டு, தீப்பந்தத்தை தலை உயரத்திற்குத் தூக்கி, குகையின் உட்புறத்தில் தன் பார்வையைச் செலுத்திப் பார்த்தான். இருளில் மன்னரைப் பற்றிக்கொண்ட வியப்பு, ஒளி முகத்தில் உலகாயதனையும் பற்றிக்கொண்டது. "அடடா அங்கொரு குவியலா! வேல்களா அவை?" என்று சொல்லிக்கொண்டே, அந்த இடத்தை நோக்கி ஓடத் தொடங்கினான். அவன் ஓடிய காலடி ஓசை, மன்னருக்குத் தெளிவாகக் கேட்டது.

சற்று தூரத்தில் ஒரு குவியல்! வேல் மலை!! சில வேல்களைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவற்றிலும் சிங்க இலச்சினையே காணப்பட்டது! "நாங்கள் பயங்கரமான அளவுக்கு ஏமாற்றப்பட்டுவிட்டிருக்கிறோம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். மெள்ள முணுமுணுத்ததனால், சற்றுத் தூரத்தில் மறைந்திருந்த மன்னருக்கு அவன் என்ன பேசுகிறான் என்பது தெளிவாகப் புரியவில்லை.

அங்கிருந்தபடியே, மீண்டும் ஒளிக்கோலைத் தூக்கிப்பார்த்து, அதற்கு அப்பாலும் ஏதாவது இருக்கிறதா என்று கண்ணோட்டம் விட்டான் உலகாயதன். வியப்புக்குமேல் வியப்பு அவனைப் பற்றிக்கொண்டது. மலைமலையாக அங்கே ஆயுதங்கள் குவிந்திருப்பதைக் கண்டான் அவன். எல்லாம் போராயுதங்களாகத்தான் இருக்கவேண்டும் என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான். அவைகள் என்ன கருவிகள் என்பதனைப் பிறகு கண்டறிவோம், முதலில் மன்னரும், அரசியாரும் எங்கே போனார்கள் என்று தேடுவோம் என எண்ணிக்கொண்டு, வேல்கள் கிடந்த குவியலின் ஒருபக்கமாக வந்து நின்றான்.

அதன் ஓரத்தில், சுவற்றையொட்டி அவன் சென்றபோது, ஒளி இருந்தும், இடறி விழுவதி

விருந்து அவனுல் தப்ப இயலவில்லே. ஏனென்ருல், சற்று முன்பு, இருளில் வேல்களின்மீது தவறிவிழுந்து, அதனுல் மெள்ள காயம்பட்டு மயங்கிய நிலேயில், சோழதேவியார் அங்கேதான் உருண்டு கிடந்தார்கள்.

கீழே விழுந்த உலகாயதன், அவனேயும் அறியாமலே 'ஐயோ' என்று அலறிவிட்டான்! ஆனுலும் தன்னேச் சமாளித்துக்கொண்டு, நன்கு கவனித்தபோது, தேவியார் கிடந்த அலங்கோலத்தைக் கண்டு பதறினுன்.

அதே நேரத்தில், கேடயங்களின் இடுக்கில் மறைந்துக்கொண்டிருந்த எள்ளாளப் பேரரசர், அங்கிருந்து வெளிப்பட்டார். அப்போதும் சில கேடயங்கள் உருண்டுச் சிதறின,

எள்ளாளர் மனத்தில், போர்க் கருவிகளே அங்கே கொண்டுவந்து சேமித்திருப்பது உலகாயதன் அல்ல என்பது தெளிவாகி விட்டதுடன், அவைகளே சிங்கள நாட்டின் ஆதரவோடு, யாரோ சேமித்திருக்கிருர்கள் என்பதனேயும், உலகாயதன் தனக்குள் பேசிக்கொண்டவைகள் மூலம் உணர்ந்து கொண்டார்!

மறைவிலிருந்து வெளிவந்ததுமே, உலகாயதன் நின்றுகொண்டிருந்த இடத்தை நோக்கி முன்னேறிக்கொண்டே, அவன் பெயரைச் சொல்லி அழைத்தார்.

மன்னரின் குரலேக் கேட்டு, அவன் ஒருகணம் அதிர்ந்தாலும், விரைவில் சமாளித்துக் கொண்டு, "நீங்கள் இங்கேதான் இருந்தீர்களா அரசே";என்ருன் வியப்போடு!

வரும்போதே, சோழ தேவியின் நிலேயைக் கணித்தறிந்துகொண்ட மன்னர், இரண்டே எட்டில் தாவி, தேவியின் அருகில் அமர்ந்து, அவரைத் தூக்கி மடியில் கிடத்திக்கொண்டு, உயிர் இருகிறதா என்பதை ஆராய்ந்து பார்த்தார் முதலில். உலகாயதன், "இங்கே கைகலப்பு அல்லது சண்டை ஏதேனும் நடைபெற்றதா அரசே!" என்று கேட்டான். விழிகளாலேயே விடை கூறிவிட்டு மன்னர், "உலகாயதா, உடனே தண்ணீர் வேண்டுமே! இங்கு கிடைக்குமா?" என்று கேட்டார்.

"ஒரு நொடியில் வெளியில் சென்றுகொண்டு வந்துவிடுகிறேன் பிரபு!" என்ருன் ஒற்றன்.

"வேண்டாம்! தேவியைத் தூக்கிக் கொண்டு, நாம் வெளியே போவோம்! என்று சோழதேவியைத் தூக்கித் தோள் மேல், லாவகமாகப் போட்டுக் கொண்டு, "நீ முன்னே போ" என்று உத்திரவிட்டார்.

நடந்துகொண்டே உலகாயதன், அங்கு நடந்தவைகளே அறிந்துகொள்ளத் துடித்தான். ஒருமுறை கேட்டாகி விட்டது. மீண்டும் கேட்கக் கூடாது; மன்னராகவே சொல்ல வேண்டும்—அதுதான் முறை என்று தனக்குள் எண்ணிக்கொண்டாலும், ஆர்வத் துடிப்பை அவனுல் அடக்கிக்கொள்ள முடியவில்லே. நிகழ்ச்சிகளே அறிந்துகொள்வதிலே, அந்த நிலேயில் தங்களேக் கண்ட எவருக்குமே ஆர்வமும், துடிப்பும் இருக்கத்தான் செய்யும் என்பது மன்னருக்கு மட்டும் தெரியாதா என்ன?

"குகைக் காவலர்கள் இருவரும் என்ன ஆனுர்கள் தெரியுமா!" என்று மன்னர், முதலில் தான் அறிந்துகொள்ள விரும்பியதை, உலகாயதனிடம் கேட்டார்.

"நான் குகையுள் நுழையும்போது, ஒருவன்,



# பேரறிஞனுனவன்!

புலவர். சி. தமிழ்மணி

அழகுமொழித் தேனெடுத்து
அறிவைத் தந்தவன்!—பகுத்
தறிவைத் தந்தவன்!—நம்
பழகுமொழி யின்சிறப்பைப்
பரப்பி வந்தவன்—ஓடிப்
பரப்பி வந்தவன்!
அண்ணனென்ற பெயரெடுத்து
அறிஞ ஞனவன்!—பே
ரறிஞ ஞனவன்!
கண்ணிரெண்டு போலவந்து
கவிதை ஆனவன்!—புரட்சிக்
கவிதை ஆனவன்!
மண்ணிலிங்கு இந்திகொன்று
மறவ ஞனவன்!—தமிழ்
மறவ ஞனவன்!—உயர்
பெண்ணுரிமை வேண்டுமென்று
பேசி வந்தவன்—எங்கும்
பேசி வந்தவன்!
ஆரியத்தின் சூழ்ச்சிகளே
அறிந்து சொன்னவன்!—நன்கு
அறிந்து சொன்னவன்!—அதன்
வேரிருக்கும் இடம்பிடித்து
வெட்டி விட்டவன்!—நயந்து
வெட்டி விட்டவன்!
அடுக்குமொழி யாலுலகை
ஆட்டி வைத்தவன்!—உலகை
ஆட்டி வைத்தவன்!—வெறும்
துடுக்குமொழி யாளர்களேத்
தொலேத்து விட்டவன்!—அறவே
தொலேத்து விட்டவன்!
தந்தைபெரி யாரெங்கள்
தலேவ ரென்றவன்!—உயர்
தலேவ ரென்றவன்!—இங்கு
விந்தைமிகு ஆட்சிகொண்டு
விரும்பித் தந்தவன்!—அவர்க்கு
விரும்பித் தந்தவன்!
எதையுந்தாங்கு கின்றஉயர்
இதயந் தந்தவன்!—நல்
இதயந் தந்தவன்!—அட!
இதையுந்தாங்கு என்று விண்ணில்
ஏகி விட்டவன்!—நம்மை
ஏங்க விட்டவன்!

## கன்னல் பொருள் தரும் தமிழே!

சாலை இளந்திரையனுர்

| | | |
|---|---|---|
| கூட்டின் அமைதி குலைகிறது (பகுத்தறிவு சுடர்தெறிக்கும் கட்டுரைகள்) | ரூ. 3 | 50 |
| பாரதிதாசன் கவிதைவளம் (பாவேந்தர் பாடல்களுக்கு ஒரு சுவைகாட்டி) | 5 | 00 |
| கவிஞர் கண்ணதாசன் | | |
| செப்பு மொழிகள் (பொன்மொழிகள் அல்ல) | 1 | 25 |
| திரை இசைப் பாடல்கள்—II | 5 | 00 |
| கண்ணதாசன் கவிதைகள்—III | 4 | 50 |
| கண்ணதாசன் கவிதைகள்—IV | 4 | 50 |
| சிந்தனை அலைகள் | 2 | 00 |
| கழகத் தமிழ் அகராதி | 10 | 00 |

### "குடும்ப நூலக திட்டம்"

ரூ. 5 விதம் 12 மாதங்களுக்குச் செலுத்தி ரூ. 81 விலையுள்ள செழுந்தமிழ் நூல்களைப் பெறலாம். விவரங்களைப் பெற 25 காசு தலையுடன் இன்னே எழுதுக.

### திருவள்ளுவர் பொத்தக இல்லம்,

பைந்தமிழ்ப் பனுவல் மாளிகை,

கடத்தூர் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.


வாயிலிலேயே என்னைத் தடுத்தான், நான் நுழையக் கூடாதென்று. அவனைத் தாக்கி, கைகால்களைக் கட்டி இழுத்துக் கொண்டுவந்து ஒரு மறைவில் கிடத்தி இருக்கிறேன் அரசே! என்றான் உலகாயதன்; அதனைத் தொடர்ந்து, "மற்றொருவனைத் தொடர்ந்து வேல் ரத்தினம், போயிருக்கிறான்" என்றான்.

"ஓ இருவரும்தான் இங்கே வந்திர்களா?" என் றார் மன்னர்.

"ஆமாம் அரசே! இந்தப் பகுதியில்தான் இன் றைக்கு எங்கள் பணி என்று நிர்ணயிக்கப் பெற்றி ருந்தது. பணியை முடித்துக் கொண்டு திரும்பும் போது, காவலன் ஒருவன் தலை தெரிக்க ஓடுவதைக் கண்டோம். வேல் ரத்தினத்தை, அவனைத் தொடரு மாறு கூறிவிட்டு, நான் இங்கே வந்தேன், ஏன் அவன் அப்படி ஓடவேண்டும் என்பதை மற்றவனிடம் கேட் டறியலாமென்று! அவனோ, என்னைக் கண்டதும், உள்ளேவழிவிட மறுத்ததுடன், தாக்கவும் தொடங்கி விட்டான். அதனால், இங்கே ஏதாவது விபரீதம் நடந்து கொண்டிருக்கவேண்டும் என்ற யூகத்தில் நான் உள்ளே நுழைந்து ஒவ்வொரு பகுதியாகப் புகுந்து புகுந்துப் பார்த்துக் கொண்டே வந்தேன். இப்போதுதான்......" என்று நிறுத்தினான் உல காயதன்.

அதற்குள், அவர்கள் இருவரும் குகையின் முகப் புக்கு வந்து சேர்ந்தார்கள். வாயிலில் கிடந்த ஒரு இருக்கையின் மீது, அருகத் தேவனின் எதிரே தேவி யைக் கிடத்திவிட்டு, மேனியின் அங்குமிங்குமாகப் பார்த்தார் மன்னர். அதற்குள் உலகாயதன் ஓடினான் தண்ணீர் கொண்டுவர. தேவியின் முதுகில் மட்டும் சிறிய காயம் பட்டிருந்தது. கொஞ்சம் குருதிமட்டுமே வெளிப்பட்டு ஒழுகிக் கொண்டிருந்தது.

வேலின் முனைதான் தாக்கி இருக்க வேண்டும் என்றும், என்ன, ஏது என்பதை அறிந்துகொள்ள முடியாத நிலையில் ஏற்பட்ட அச்சத்தாலும், அதிர்ச் சியினுலுமே தேவி மயங்கிவிட்டாள் என்றும் யூகித் துக் கொண்டு, அருகே, அவரது தலைமுகட்டில் அமர்ந்து, ஆசி அருளி உள்ளே வரவேற்ற அருகத் தேவனின் திருக் கோலத்தின் மீது ஒருமுறை பார்வையைச் சுழலவிட்டார். என்ன எண்ணிக் கொண்டாரோ! இகழ்ச்சிப் புன்னகையொன்றை உதிர்த்தன அவரது உதடுகள்! ஒருகால், "புத்த தேவா! உன் இருப்பிடத்திலா இந்த சித்து விளையாட் டுக்கள்? உன் பெயராலா இந்த வெங்கொடுமைகள்? என்று எண்ணிக்கொண்டு மிருக்கலாம்!

உலகாயதன், ஒரு பித்தளைப் பாத்திரத்தில் தண் ணீர் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான்.

மன்னர், தேவியாரை மடியில் எடுத்துக் கிடத் திக்கொண்டு மெள்ள, நீரை தேவியாரின் வாய்க்குள் செலுத்த முயன்றார்.

கொஞ்சம் பருகினார்! இல்லை! பருகச் செய்தார் மன்னர்! முதுகைப் புரட்டி வழிந்து கொண்டிருந்த இரத்தத்தை ஈரத்துணியால் துடைத்தார். இரத்தக் கசிவு நின்றது. மன்னரது உத்திரவும் பிறந்தது.

"உலகாயதா, குகையின் பின்புறத்தில், அந்தப் பக்கம், எனது குதிரை இருக்கிறது கொண்டுவா!" என்றார்.

உலகாயதன் ஓடினான். ஒரு நிமிடத்தில் மன்ன ரின் குதிரையுடன் திரும்பி வந்து சேர்ந்தான் அவன்.

மன்னர், தேவியை மீண்டும் தன் தோள்மேல் கிடத்திக்கொண்டு குதிரை மீது ஏறினார். ஏறி அமர்ந்துகொண்டு, தேவியை இறக்கி குதிரை மீது அமர்த்தி, ஒருகையால் இறுக அணைத்துக் கொண்டார்.

அதற்குள், வேல் ரெத்தினம் என்ற மற்றொரு காவலனை கைகளைப் பிணைத்துக்கட்டி, இழுத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். உலகாயதனும், தான் கட்டிப் போட்ட காவலனைப் பிடித்துவர, திரும்பத் தயாரானான்.

"உலகாயதா! இவர்கள் இருவரையும் அரண் மனைக்குக் கொண்டுவா! உயிருக்கு ஊறு எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது." என்று உத்திரவிட்டுவிட்டுக்

(15-ஆம் பக்கம் பார்க்க)

## சுவைத்ததைச் சொல்கிறோம்

காதற் பொருள் விளக்கக் கற்கண்டுச் சொல்லெடுத்து
'மாதவி'ப் பெண்ணின் 'மணாளன்'முன் - ஓதிய
செஞ்சொற் கவிகண்டேன்; சிந்தை மகிழ்ந்திட்டேன்
எஞ்சாமல் வாழ்த்துகின்றேன் இன்று!

—ந. கருணாநிதி, புங்கனூர்

# ஒரே இதழில் உலக நஞ்சு!

"போடியன்"

எப்போதோ படித்த கதை அது. அதை நினைத்துப் பார்க்க வேண்டிய நிலையே இதுவரை ஏற்படாதிருந்தது!!

நினைத்துப் பார்த்தது பிறகு இருக்கட்டும்; படித்த கதை என்ன வென்று சொல் என்று கேட்கிறீர்களா?

சொல்லி விடுகிறேன்.

கதையா அது? தமிழகத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? மாடோட்டி வந்ததுகள் இந்த நாட்டையே வளைத்துப் போட்டுக் கொள்ளும் அளவிற்கு வளர்ந்தது எப்படி? எப்படியும்வளையும் நாக்கு எப்பழியையும் செய்யும் நெஞ்சு, இரண்டொரு புல் ஆகியவற்றை வைத்துக் கொண்டே 'அதுகள்' ஸ்ரீலஸ்ரீக்களாகவும், 'ஸ்ரீமத்'துக்களாகவும், கடவுளின் தாதுவர்களாகவும் மாறியது எப்படி என்னும் வினாக்களுக்கெல்லாம் கிடைக்கக் கூடிய விடைகளையே பாத்திரங்களாக ஆக்கிப் படைக்கப்பட்டதே அந்தக் கதை!!

அடடா......போதுமே; முதலில் கதையைச் சொல் என்று துடிக்கின்றீர்களா?

இப்போது சொல்லி விடுகிறேன்.

கதையின் பெயர் 'இளவரசி' என்பதாகும். ஆசிரியர் திரு. கே. ஜி. இராதாமணாளன் அவர்கள்.

ஓடி வந்ததுகள் உயர்ந்ததற்கும், ஓங்கி நின்றவர்கள் தாழ்ந்ததற்கும் காரணம், ஓடிவந்த ஒய்யாரிகளே என்பதைக் கருவாய்க் கொண்டு எழுதப்பட்ட அந்தக் கதையிலே வருகிறாள் ஒரு சிங்காரி.

அவள், உடலில் நஞ்சூட்டப் பட்டு வளர்க்கப்பட்டவள்.

மறவர்களை மயக்கிடக் கொஞ்சு மொழி பேசிக் குலவிடும் அவள் முத்தமிடுவாள்; வீரர்கள் மடிவார்கள்.

ஆம்!

அவளின் கொவ்வை இதழ்களில் மிஞ்சிக் கிடப்பது நஞ்சு.

ஓடிவந்த பேடிகள் உயர்ந்ததும் அந்தப் பெண்ணால்தான்; ஓங்கி வளர்ந்த இனம் அழிந்ததும் அந்தப் பெண்ணால்தான்;

அவர்கள் 'ஆனதும்' பெண்ணால்! நாம் அழிந்ததும் பெண்ணால்!!

ஒருவேளை......!!

இப்படி, ஒய்யாரிகளையும் சிற்றிடைச் சிங்காரிகளையும், பதும முகப் பாவையர்களையும் கொண்டு வெற்றி பெற்றக் களிப்பினாலே தான் "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" என்று சொல்லி வைத்தார்களோ? 'அவாளைத்'தான் கேட்கவேண்டும்!!

இடைப் பிறவரலாக எங்கேயோ சென்றுவிட்டேனே!!

செய்திக்கு வருகிறேன்.

அந்த இளவரசிக் கதையில்வரும் விஷக் கன்னியின் இதழ்களில் கிடந்த நஞ்சு உலகத்தையே அழிக்கப் போதுமாமே — அதுபோல, 29-8-71 ஆம் நாளைய ஓர் இதழில் கலந்திருந்த நஞ்சும் வாய்ப்புக் கிடைத்தால் இந்த உலகினையே அழிக்கப் போதுமானதாகும்.

## சிறப்புக் கட்டுரை!

மறுமுறையும் மர்மமா? இதழின் பெயர் என்ன என்று கேட்கிறீர்களா?

கவனமாகக் கேளுங்கள்...'கல்கி'.

இந்த ஓர் இதழ் 'கல்கி'யே இவ்வளவு நஞ்சைக் கக்குகிறது என்றால்.......!! அப்பப்பா!!

இதுவரை வெளி வந்தனவும், இனி வெளிவரப் போவனவும் சேர்ந்தால்......அம்மவோ!!

தமிழன் எவ்வளவு விழிப்போடு இருக்க வேண்டும் என்பதற்கு இதைவிட வேறுவிளக்கமே தேவையில்லை.

இந்த இதழில் ராஜாஜியின் கருத்துக்கள் என்ற மகுடமிட்டு வந்துள்ள 'ஆலகால விஷத்தை' முதலில் காட்டுகிறேன்.

அர்ச்சனையும் மொழியும் என்ற தலைப்பில் எழுதிய ஆச்சாரியார் தான் ஒரு வழக்கறிஞர் என்பதைத் தெளிவாகக் காட்டிக்கொள்ள 'பகிரதப் பிரயத்தனம்' செய்துள்ளார்.

அரசு, "கோயிலில் நடக்கும் சடங்குகளின் விஷயத்தில் பிரவேசிக்க இடம் தந்துவிட்டால் அபாயமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார் ராஜரிஷி. அபாயமாகும் என்று எச்சரிக்கை விடும் ஆச்சாரியார் யாருக்கு அபாயமாகும் என்பதை மட்டில் சொல்லாமல் விட்டுவிட்டார்.

யாருக்கு அபாயம்?

இந்த வினாவிற்கு மட்டும் விடை கண்டுவிட்டால், மானத் தமிழன் இந்த எச்சரிக்கையைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

காவல் பலப்படுத்தப் பட்டால் கள்ளர்களுக்குத் தானே அபாயம்?

கோயில் சடங்குகளில் அரசு தலையிட்டால் எந்தத் தமிழனின் வயிற்றுப் பிழைப்பில் மண் விழப் போகிறது?

அடுத்தபடி, தமிழில் அர்ச்சனை கூடாது என்பதற்காக அரசியல் சாசனத்தின் 25, 26 ஆகிய பிரிவுகளைக் காட்டி மிரட்டுகிறார்.

எடுத்ததற்கெல்லாம் தர்மத்தையும், சாத்திரத்தையும், புராண இதிகாசங்களையுமே காட்டிப் பழக்கப்பட்ட ஆச்சாரியார் புதிய ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டு போரிட வருவானேன்!!

காரணமில்லாமலா?

கண்ணன் காட்டிய வழி இந்தக் கலியுகக் கண்ணனுக்கு நினைவில் இல்லாமல் போகுமா?

கிருஷ்ணாவதாரமும், ராமாவதாரமும் 'சும்மாவா' புராணத்தில் வருகின்றன.

'ஜெயமே' முக்கியமானதாகக் கருதப் படும்போது 'உபாயம்' எப்படி வேண்டுமானாலும் அமையட்டும் என்பது தானே 'தேவாதிகளின்' தத்துவம்.

மறைந்திருந்து கொன்றானே இராம வீரன், அதற்கு விளக்கமில்லையா!!

'பிராமண' வேடமிட்டுக் கர்ணனுடைய சாவுக்குக் காரணமானானே கண்ணன், அதற்குத் தத்துவ விளக்கம் கூறப்படவில்லையா!!

அதனால் தான், ஆச்சாரியார் ஆயுதத்தை மாற்றுகிறார்!!

தமிழில் அர்ச்சனைக் கூடாது
ன்பதற்கு மட்டில் சட்டத்தை
ட்டும் சக்ரவர்த்தியார், சட்டத்
திற்கு மாறுபட்டு நடப்பதில்லையா?
—ந்ததில்லையா?

'வெள்ளையனே வெளியேறு'
ன்று அந்நியனை ஓட்ட முனைந்
நாமே, அப்போதும் வெள்ளையன்
ட்டியதும் சட்டந்தான் என்றால்,
ந்த வெள்ளையனின் மறுவுருவா
த்தான் ஆச்சாரியார் நிற்கிறாரா?

ஆலய அர்ச்சனை என்பது
நான்று தொட்டு "மத அனுஷ்
ானங்களின் ஓர் அங்கமாக வந்
ள்ளது; ஒவ்வொரு ஆலயத்தி
ம் அர்ச்சனை கிரந்தங்கள் சம்பிர
யப்படி, வந்துள்ளன என்று
ாக்க விரிவுரை செய்துள்ள ஆச்
ரியார், 'எனவே இது' மத
னுஷ்டானம்' என்பதிலேயே
க்கம் என்றும், இதில் புதுமை
ப் புகுத்துவது அரசியல் சாஸ
ப்படி சமய சுதந்திரத்துக்கு முர
கும் என்றும் வாதாடுகிறார்.

சட்டத்தையும் சம்பிரதாயத்
தையும் கத்திமுனையிலே ஒன்றாக்கி,
மை மிரட்டுகிறார் மாம்பலத்து
ா முனிவர்.

உயர்ந்தசாதிக்காரனுக்கு உள்ள
னுஷ்டானங்களையும், சம்பிர
யங்களையும் கழுத்தை நெறித்
கொன்றுபோட்டு, வளர்ந்து
ம் புதுமை தந்த வரங்களை
ல்லாம் அனுபவித்துக் கொண்டு
ம் மேல்சாதிக் காரனுக்கெல்
ம் என்றைக்குத் தண்டனை
டக்குமோ அன்றைக்கு ராஜ
யின் கருத்தும் இப்படியே
க்குமா என்று மட்டும் எண்
ப் பார்த்தால் போதும்!!

அனுஷ்டானங்களும், சம்பிரதா
களும் பஞ்சு பஞ்சாகப் பிய்த்து
யப்பட்டு, 'எங்கே போயி
வா' என்று தேடிக் கொண்
க்கவேண்டிய காலத்தில் சாணை
க்கப்படாத சம்பிரதாயப் பட்
க்கத்தியைத் தூக்கி வரும் ஆச்
யார் அவர்கள், "ஊருக்குச்
ன்னேண்டி பெண்ணே,
க்கு மட்டும் இல்லேடி
ணே" என்ற போக்கில்
டந்த சங்கை எடுத்து ஊதி,
ளதையும் கெடுக்கப் பார்க்
ர்.

ரிய மொழிதான் அர்ச்சனைக்
து என்பது உண்மையானால்,
ப் பூண்டே இந்த மண்ணில்
பாத காலத்தில் இங்கு கட
கிடையாதா? வழிபாடே
இல்லையா? அப்போது எந்தமொழி
யால் ஆண்டவன் அர்ச்சனை செய்
யப்பட்டான்? தமிழில்தானே தமி
ழன் வணங்கி இருப்பான்; பிறப்
பால் உயர்வு சாதி இல்லாத அந்
தப் பொற்காலத்தில் தமிழன்
தானே அர்ச்சனை செய்திருப்பான்.

அந்த அனுஷ்டானங்களும், சம்
பிரதாயங்களும் மாற்றப்பட்ட
போது, இப்போது, நியாயமற்ற
நிலையில் வளர்ந்திருக்கும் சம்பிர
தாயங்களையும், அனுஷ்டானங்
களையும் மாற்றக் கூடாதா?

தமிழில் அர்ச்சனை செய்யக்
கூடாது என்றால், தமிழிலிருக்கும்
வழிபாட்டு நூல்கள் எல்லாம்
எதற்காக? தேவார திருவாசகங்
களும், திவ்ய பிரபந்தங்களும்எதற்
காக உருவாயின?

மாமியார் உடைத்தால் மண்
பாண்டம்; மருமகள் உடைத்தால்
பொன் பாண்டமா?

'மாமி'களின் பதில் கிடக்கட்டும்!

மருமகளுக்கு உணர்ச்சி வேண்
டாமா?

பிரார்த்தனை மொழி குறித்துக்
காந்தியடிகள் சொன்னதை
ஆதார அம்பாக்கி எய்திட நினைக்
கும் ஆச்சாரியார் பயிற்றுமொழி
குறித்து காந்தியடிகள் சொன்ன
தைப்பற்றி மட்டும் காற்றில்
பறக்கவிடுவானேன்?

காந்தியடிகள் 'இப்பொழுது
வழக்கில் பரவியுள்ள பல மந்திரங்
கள், சுலோகங்கள் ஆகியவற்றின்
விஷயத்தில் பழைய சமஸ்கிருத
வாசகங்களையே பின்பற்ற வேண்
டும்' எனக் கூறுகிறார்.

உண்மைதான்!

காந்தியடிகள் இப்படிக் கூறுவ
தற்கு என்ன காரணம் என்பதை
மட்டில் எண்ணிப் பார்த்தால்
ஆச்சாரியாரின் ஏமாற்றுவித்தை
நன்கு புரியும்!!

சமஸ்கிருத வார்த்தைகளைத்
தாய்மொழியில் மொழிபெயர்ப்
பதைவிட, அதே மொழிச் சொற்
களைப் பயன்படுத்தலாம் என்பது
தான் காந்தியடிகள் சொன்னது.

## விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள்
தங்கள் பாக்கித் தொகை முழு
வதையும் அனுப்பி வைத்து ஒத்
துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
"காஞ்சி", காஞ்சிபுரம்-3.

எனவே, காந்தியடிகள் மறுப்பது
மொழிபெயர்ப்பை மட்டுமே என்
பதை ஆச்சாரியார் ஒப்புக்கொள்
வாரேயானால், தாய்மொழியி
லேயே அர்ச்சனை செய்வதை
எதிர்ப்பதற்குக் காந்தியடிகளைக்
கேடயமாகப் பயன்படுத்தமாட்
டார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை
தமிழில் உள்ள பக்திப் பாடல்
களைக் கொண்டு கடவுளை வழிபடு
வோம் என்பதுதான் நோக்கமே
தவிர சமஸ்கிருத 'ஸ்லோகங்களை'
மொழிபெயர்ப்போம் என்பதல்ல.

அகில உலகத் தத்துவங்களை
யெல்லாம் அள்ளி வீசுபவர்க்கு
இது தெரியாமல் இருக்க நியாய
மில்லை. என்றாலும், 'கோணியில்
கல்லைக் கட்டி அடிப்பது' என்பார்
களே அதுபோல் ஆச்சாரியார்
தன் வாதங்களை எடுத்து வீசி
யுள்ளார்.

என்ன செய்வது?

ஆசை யாரை விட்டது, ஆச்சாரி
யாரைவிட; என்னதான் இருந்
தாலும் 'சம்ஸ்கிருத பாஷா'மேல்
இவ்வளவு அபிமானம் இருக்கக்
கூடாது.

எப்படியோ!

ஆச்சாரியாரின் இதுபோன்ற
திருப்பணிகள் தொடரவேண்டும்
என்பதே நம் ஆசை.

சாதியின்பேராலும், கட்சிகளின்
பேராலும், வேறுபட்டு, 'என்ன
தான் இருந்தாலும் நாமெல்லாம்
தமிழர்கள்தானே' என்னும் இன
வுணர்ச்சியை மறந்து கிடக்கும்
தமிழர்களை ஒன்றாக்கப் போவது
ஆச்சாரியார்தான்.

அந்தக் காலம் வெகுதூரத்தில்
இல்லை!

எந்த அளவுக்குத் தனக்கு ஆரிய
தர்மத்தின் மீதும், மொழியின்
மீதும் ஆசை இருக்கிறது என்பதை
எவ்வளவு விரைவாக, ஆச்சாரி
யார் காட்டிக் கொள்ளுகிறாரோ,
அவ்வளவு விரைவாகத் தமிழினம்
ஒன்றுபடத்தான் போகிறது.

அதற்காகவாவது, இன்னும்
நீண்ட நாள் ஆச்சாரியார் வாழ
வேண்டும்; தமிழினம் ஒன்றுபட
வழிகாட்ட வேண்டும். அதற்கு
இதுபோன்று ஆயிரமாயிரம்
முறைகளில் தமிழ் எதிர்ப்பையும்,
ஆரியப் பற்றையும் காட்டிக்
கொள்ள வேண்டும்.

மன்னிக்கவும்......

வாழ்க ஆச்சாரியார்!

வளர்க அவர்தம் தமிழ் எதிர்ப்
புத் தொண்டு!! ஃ

இலக்கியம்

# நிகழ்ந்ததைக் கேட்டால்...!

— சீவ. நடராசன் —

தீரா மயக்கம் அவளுக்கு!

நினைவின் பால் வயப்பட்டு உணர்வோடுகூடி தன்நிலையை இழந்த மயக்கம் என்பதா?

கனவின்பால் திளைத்து, உணர்விழந்து நினைவுகளை கனவுகளாக்கி நினைந்து நினைந்து தன்னையே இழந்த மயக்கம் என்பதா?

தரம்பிரித்துக் கூற வியலாத தொருமயக்கம்,

பொழுது புலர்ந்தது தான் கரைந்து விடப்போகின்றோம் என்ற நிலையினைத் தெளிவறத் தெரிந்தும், வெண்முத்துப் பனித்துளிகள் இளம் கதிரவனை வாழ்த்தி வர வேற்கின்ற நிலையிலும் பச்சை மாமணிக்கட்டிலிலே அந்தப் பாவை இன்னும் படுத்துறங்குகின்றாளே! என்ன வந்தது அவளுக்கு! ஏன் இந்த மயக்கம்!

மூடியும் மூடாமலும் கிடக்கின்ற கரு நீல மலர்விழிகள் அரைப் பார்வையில் தினறிக்கொண்டிருகின்றன.

வாடியும் வாடாமலும் தனக்கேயுரிய வனப்பினை அணுவளவேனும் குறைக்காமல் அந்த செவ்வந்திப்பூமேனி கொடியாய்த் துவண்டு நெளிந்து செயலற்றுக் கிடக்க முயற்ச்சித்துக் கொண்டிருக் கின்றது.

தேடியும் தேடாமலும் தானாகவே வந்தடைந்த கிடைக்கப் பெரு செல்வத்தை, இந்த இரவிற்குள்ளாகவா, நெடு நாட்களுக்குப் பின் கிடைத்த ஒருமுறைக்குள்ளாகவா, அதுவும் இந்த வயதினிலா இழந்து விடுவது என்றெண்ணி ஏன் புலர்ந்தாய் பொழுதே என சலித்துக் கிடக்கின்றது.

இவ்வளவையும் கொண்டிருக்கும் அந்தப் பேதையையும் ஆட்கொண்டிருக்கின்றதே அந்த மயக்கம்!

அந்த மயக்கம் தனது பின்னணியிலே எந்த நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு தானும் மயங்கி மற்றவர்களையும் மயக்கிக் கொண்டிருக்கின்றது.

ஊட முயற்சித்து ஊடிப்பின் கூடிக்கலந்த நினைவுகளின் மயக்கத்தில் அந்த நினைவுகளையே கனவாக்கி இன்னும் தொடராதா! இனிக்க இனிக்கப்படராதா என நினைத்து, மீண்டும் செயலாக்கத் துடிக்கின்ற எண்ணங்களோடு பின்னிப் பிணைந்து மனப்புழுக்கம் ஏற்படுத்திய மயக்கத்தில் புரண்டுகொண்டிருக்கின்றாளா, என்ன!



ஏன் இன்னும் கட்டிலைவிட்டு எழுந்திருக்க மனமின்றிப் படுத்துக் கொண்டிருக்கின்ற அளவுக்கு மயக்கம் அவளுக்கு?

ஆமாம், இனம்புரியாத, புரிந்தும் வெளியே சொல்ல முடியாத மயக்கந்தான். அந்த மயக்கத்தினால்தான் பஞ்சணை அவளைப் பிரிய மறுக்கிறது!

வெற்றிமாலை கூடுவதையே தொழிலாகக் கொண்ட காதற் கணவன், வேல் நெடுங் கண்ணுளிடம் "விரைவில் வந்திடுவேன் கண்ணே வருந்தற்க" எனக் கூறி விடைபெற்றுச் சென்றவன் வெற்றித் திருமகளை மணந்து நெடுநாட்களுக்குப் பிறகு வீடு திரும்பியிருந்தான்.

இப்பொழுதாவது வந்தாரே என்ற மகிழ்வு ஒருபால்; இத்தனை நாள் நம்மைப் பிரிந்திருக்கும் மனத்துணிவைப் பெற்றிருந்தாரே என்ற சினம் மற்றோர் பால்.

இரண்டும் இணைந்து ஊடலாயிற்று! நாட்கணக்கிலும், திங்கட் கணக்கிலும் நம்மைத் தவிக்க விட்ட அவரின் எண்ணத்திற்கு நாமும் அவரை இந்த இரவின் சில நொடி நேரத்திற்கு தவிக்கவிட வேண்டும் என்ற எண்ணம் அவளது நெஞ்சிப் பெட்டகத்தினுள் ஒளிந்து கொண்டிருந்தது.

காதல் துறையில் அவனது வலிவற்ற இதயத்தை அவள் நன்கு புரிந்து கொண்டிருந்தாள்! குறும்புக்காக அவனது தவிப்பைப் பார்க்க விழைந்தாள் அவள்!!

எனவே அவள் ஊடினாள்.

வாளும் கேடயமும் ஒருசேரத் தாங்கிப் பொருதுகின்ற நெஞ்சத்தோடு அந்த வளைக்கரத்தாள் வேங்கையெனச் சீறினாள், அரிமா எனப் பாய்ந்தாள்!

அவள் சூடிய மலர்கள் தன் நிலையழிந்து தரையில் வீழ்ந்தன.

அவள் அணிந்திருந்த ஆடையோ "நானல்ல எனைப்பற்றி இழுக்காதீர் இவ்வளவிற்கும் காரணம் இவளே" என அவள் மீதே பழியைச் சுமத்தித் தானாகவே தப்பித்துக் கொண்டன.

அவள் நினைத்துப் பயின்ற ஊடல் வென்றது. அவள் எதற்காக ஊடினாளோ அந்த ஊடல் அவளுக்குக் கூடற் செல்வத்தை ஈட்டித்தந்தது.

வியர்வைத் துளிகள் தாமரை இலைத் தண்ணீர் போன்று அவளது பூமேனியிலே அரும்பு அரும்பாகத் திரண்டிருந்தன.

பவளமோ, கொவ்வையோ என சிவந்திருந்த அவளின் கனி இதழ்கள் பாலோ பரலோ என வெளுத்துப் போயிருந்தன.

நீண்டகன்ற கயல் விழிகள் இமைச் சிறைக்குள் ஒடி ஒளிவதைப்போல் செறுகிக் கொண்டன.

மூங்கிற்றோளும், நாணற் போன்ற மெலிந்த இடையும் அவனது கைப்பிடிக்குள் சிக்கித் தவித்துத் தடம் பதிந்த இடமெல்லாம் கன்றிச் சிவந்து போயிருந்தன.

வெற்றிப் பெருமிதம் விளைத்தெடுத்த வீர உரைகள், பிணக்குகள், முனகல்கள் இவையனைத்தும் அவர்கள் இருவரிடையேயும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன.

கூடற் பெருங்களத்தே யாருக்கு வெற்றி, தோல்வி என முடி

வுரைக்க முடியாவண்ணம் இருவருமே சமமாகப் பொருது நின்றனர்.

"புலராதே பொழுதே" என வேண்டினர்!

"மலராதே மலரே" என்றனர்!

"பெறுகின்ற இன்பத்தை முடியாதே அமுதே" என்றனர்,

எவ்வளவோ நாட்களுக்கு முன்பு பயின்ற பாடம்! மீண்டும் பயின்றனர். முகில் திரைக்குள் முகம் மறைத்துக் கொண்டாள் நிலவுக் கன்னி. இங்கோ கரமலர்க்குள் தன்னையே மறைத்துக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தாள் அந்த அழகுக் கன்னி!

நொடிகள் பறக்க......வெள்ளி முளைக்கக் கீழ்வானம் வெளுத்தது!

"பொழுது புலர்கின்றது" எனச் சேவல் கூவியது.

"கதிர்கள் விரிகின்றன" எனக் காகம் கரைந்து பறந்தது.

பகலவனின் பவனி வையத்தில் முழுமை பெற்றுக் கொண்குருந்தது மலர்கள் மலர்ந்தன. இத்தனைக்குப் பின்னும் அவளது உள்ளுணர்வு அவளைக் கூவியெழுப்பவில்லை. செய்வினை தேடிச் சென்றவனோ அவளை விளித்து 'எழுந்திரு' எனச் சொல்லவில்லை.

விழிமலர்கள்கூட இன்னும் மலர்ந்தும் மலராத நிலையிலேயே உள்ளன.

சொன்னதைச் சொல்லும் கிளி கூட கூண்டிலுள்ள பற்றுக் கொம்பின்மீது உள்விளிம்புகளிடையே இப்படியும் அப்படியுமாக நடந்து நடந்து திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் இருக்கிறது,

இத்தனைக்குப் பிறகும் அவள் எழுந்திருக்கவில்லை.

கலவி மயக்கம் அவளுக்கு! ஆமாம், நேயக் கலவி மயக்கம் அது!!

அவளொத்த இளம் வயதுப் பெண்டிர் சிலர் அவளது இல்லத்துள் நுழையும் சிலம்போசை அவளின் காதுகளுக்கு அரை குறையாகக் கேட்கிறது.

ஏடி தோழி என எழுப்ப முயல்கின்றனர். கலைந்தும் கலையாத துயிலைப் போலவே அவளின் துகிலும் காட்சியளிக்கிறது. அந்தக் கோலம் அவர்களுக்கு இரவை நினைவுபடுத்துகிறது. அவர்களுக்கும் அதே அனுபவந்தானே!!

இருந்தாலும், அவர்கள் பொழுதைப் புலரவிட்டார்கள்; ஆனால் இந்தப் பாவையோ, அது புலரவே கூடாது; புலர விடக்கூடாது என்றல்லவா, துயிலைத் தொடர்கிறாள்!

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற
பரங்கிப்பேட்டை
**வைத்தியம்**
**சென்னையில்**
நேரில் சிகிச்சை பெறலாம்.
ஆலோசனைக்கு:
**ஹக்கீம்**
**M. M. முஸ்தபா, R.M.P.**
சித்த ஆயுர்வேத யூனானி முறை
ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில்
அதிக அனுபவம் உள்ளவர்.



சகலவித சர்ம நோய், ஸ்கலிதம்,
ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி,
பெண்களின் மாதவலி,
வெள்ளை படுதல், நீரழிவு வாதம்,
ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும்
பல நோய்களுக்கு கைதேர்ந்த
சிகிச்சை பெறலாம்.
நோய் விபரம் எழுதி V.P.P. மூலம்
மருந்து பெறலாம்.
**முகம்மதியா**
**வைத்தியசாலை**
[டிரஸ்ட்]
130, பிராட்வே, சென்னை-1.
போன்: 23643
H.O. பரங்கிப்பேட்டை,
தென் ஆற்காடு ஜில்லா.

பொழுதென்ன காதல் களத்தவரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டதா?

நடந்தவைகளை அறிய வந்தவர்களுக்கு ஆவல்! இதழ்க் கடையில் குறுநகை ஒளிர அவர்கள், அவளைப் பார்க்கின்றனர்! அவளும் அவளைப் பார்க்கிறாள்; பார்த்து? தூங்குவதுபோல் நெளிந்துகொண்டிருப்பவளின் வாயிலாகவே எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவர்களை மீறுகிறது!

அவர்களின் தவிப்பைப் போக்குவதற்கென்றே பின்னின்று ஓர் குரல் ஒலிக்கிறது! ஞால மொழி வழக்கறியாது, இலக்கண மரபு போற்றாது தான் பேசும் பேச்சிலேயே கோலத்தை விளக்கின்ற கிளிப் பிள்ளை தனக்கே யுரிய மழலைக் குரலில் சொன்னதைக் கேட்டவாறே தான் திருப்பிச் சொல்கிறது அல்லவா!

அப்படித்தான் அந்த இரவில், அங்கே நிகழ்ந்த சில உரையாடல்களை—உரையாடலின் உணர்ச்சிப் பொறுமல்களை, இன்ப முனகல்களை சுவை குன்றாவண்ணம் ஒன்றன்பின் ஒன்றாகக் கருத்து மாறுபடாமல் உரைக்கிறது கிளி.

"போதும்! ஐயோ என்னை விடுங்களேன்" என்று சலித்துக் கெஞ்சுகிறது ஒருமுறை!

"வெவ் வெவ்வே! அழகுதான் போங்கள்", எனக் கொஞ்சுகிறது மற்றொரு முறை!!

"என்ன இருந்தாலும் இவ்வளவு முரட்டுத்தனம் கூடாது உங்களுக்கு," எனத் தனக்குத் தானே பரிந்துரைத்துக் கொண்டதைச் சொல்லிக் காட்டுகிறது இன்னொரு முறை!!

கொச்சைத் தமிழில் கிளி இரவு நடந்தவைகளைக் கொத்த ஆரம்பித்த உடனேயே அவளுக்கு மயக்கம் தெளிந்து விடுகிறது!!!

இதுவும் பேசுகின்றதே! அதுவும் தெளிவாகப் பேசுகின்றதே! ஒன்றையும் ஒவிக்காமல் உண்மையினை உள்ளவாறே பேசுகின்றதே என்று வியந்து அல்ல; இன்னும் அது எல்லாவற்றையும் பேசவேண்டும் என்ற ஆவல் மிகக்கூர்ந்து நிற்கின்றனர், தோழியர்.

ஐயோ, பேசுகின்றதே! அனைத்தையும் பேசுகின்றதே! ஒன்றையும் மீதம் வைக்காமல் தெளிவோடு பேசுகின்றதே என்ற வெட்கம் அவளைப் பற்ற, சட்டென்று எழுந்து, தத்தையின் வாயைப் பொத்திவிடுகிறாள் அவள்!! அதைக் கண்டு சிரிக்கின்றனர் அவர்கள்! அந்தச் சிரிப்புதான் எவ்வளவைப் புதைத்துக் கொண்டிருக்கிறது!

இதைத்தான், பரணி பாடிய புலவரும் தமது கடை திறப்புப் பகுதியில்!

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளி
உரைப்ப,
வாயைப் புதைக்கும் மடநல்லீர்!
மணிப்பொற் கபாடம்
திறமினோ!

என்று நயமாக ஓர் காதற் காட்சியை நம்முன் படைக்கின்றார்! ஃ

# காஞ்சி

## ஏழாம் ஆண்டு மலர்

தமிழகத்தின் தலைசிறந்த
எழுத்தாளர்கள், கவிஞர்கள்,
கலைஞர்கள், மற்றும்

அமைச்சர்கள், தலைவர்கள்

ஆகியோரின்

கருத்துக் கருவூலங்கள் நிரம்பியதாகத்
தயாராகிறது!

அக்டோபர் முதல் வாரம்
வெளிவருகிறது!

விலை ரூபாய்
ஒன்றுதான்!


(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடிவாளத்தைச் சுண்டினர். அவர் அமர்ந்திருந்த குதிரை பறந்தது.

தங்களால் தாக்கப்பட்டவர்கள், அனுராதபுரத்தின் மன்னரும், அரசியாரும், என்பதை, அப்போது தான் புரிந்துகொண்டான் வேல் இரத்தினத்தினுல் இழுத்து வரப்பட்டவன். தங்களுக்குத் தூக்குத் தண்டனை நிச்சயம். என்று எண்ணிக் கொண்டான். அவ்வளவுதான்! அவனும் மூர்ச்சித்து விழுந்தான்.

உலகாயதன், குகைக்குள் திரும்பி, தான் கட்டிப் போட்டிருந்த இன்னொரு காவலனையும் இழுத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்ததும், அவன் மற்றவனைப் பார்த்து, "ரெத்தினம், நீ இவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு அரண்மனைக்குப் போ! நான் பின்னுலேயே வந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறி, இரு காவலர்களையும் ஒன்ருகப் பிணைத்து குதிரைமேலேற்றிவிட்டான். வேல்ரத்தினம் என்ற அந்த ஒற்றன் ஏறிய குதிரையும் பறந்தது, மூவரையும் சுமந்துகொண்டு.

அந்தத் திசையிலிருந்து வேறுபக்கம் புறப்பட்டான் உலகாயதன், குகைக்குப் புதிய காவலர்களை நியமிப்பதற்காகவும், அங்குள்ள போர்க் கருவிகளைப் பாதுகாப்பதற்காகவும். ஆனுல் அவன்மனம் மட்டும் நிறைவு பெருமலே இருந்தது, முழு விவரமும் புரியவில்லையே என்று!

கதிரவன் உதயமாகி, ஏறக்குறைய இருபது நாழிகை கழிந்த பின்னர், மன்னர் அரண்மனைக்குத் திரும்பினுர், காயம் பட்ட தேவியாருடன்.



# அற்புதமான பொற்குவியல் அழைக்கிறது உங்களை!



ரூ. 10 லட்சம் பெறுவோர்

| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) சிறப்புப் பரிசுகள் | | (ஒவ்வொரு வரிசைக்கும்) சாதாரணப் பரிசுகள் | |
|---|---|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 10,00,000 | நான்காவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றும் ரூ. 10,000 | ரூ. 50,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 2,00,000 | ஐந்தாவது பரிசுகள் பத்து ஒவ்வொன்றும் ரூ. 5,000 | ரூ. 50,000 |
| மூன்றாவது சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 1,00,000 | ஆறாவது பரிசுகள் ஐம்பது ஒவ்வொன்றும் ரூ. 1,000 | ரூ. 50,000 |
| | ரூ. 13,00,000 | ஏழாவது பரிசுகள் ஆயிரம் ஒவ்வொன்றும் ரூ. 100 | ரூ. 1,00,000 |
| | | | ரூ. 2,50,000 |

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள் 253

மோத்தப் பரிசுகள்: 10653

மோத்தப் பரிசுத் தொகை:

**ரூ. 38,00,000**

குலுக்கல் நாள்: **11-10-1971**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1 - தான்

இன்றே வாங்குங்கள்

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
சீட்டுத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.


...ர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3 ... அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.